C.C.No. 155/2018 26.02.2024

PW - 2 Bose S/O. Veeraiya

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**குறுக்கு விசாரணை: (எதிரிகள் தரப்பில்)**

அ.சா1 ஆன உங்கள் மகள் உங்கள் வீட்டிற்கு வந்து எத்தனை வருடம் கழித்து புகார்கொடுத்தார் என்றால் 3 வருடம் கழித்து கொடுத்தார். அசா1 ற்கும் அவருடைய கணவரான 1வது எதிரிக்கும் கணவன் மனைவி உறவு முறையில் உள்ள பிரச்சனை குறித்து உங்களுக்கு நேடியாக தெரியாது என்று சொன்னால் தெரியும். அந்த மாதிரி உங்களுக்கு தெரிந்த நேரடியான சங்கதிகள் குறித்து போலிஸ் விசாரணை மற்றும் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். அ.சா1 கொடுத்த புகாரனது 1வது எதிரி வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த புகாருக்கு முன்பாக வேறு எந்த புகாரும் எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுத்துள்ளோம்.

வெளிநாட்டிலிருந்து 1வது எதிரி வந்ததற்கு பிறகு அசா1ற்கும் ராமச்சந்திரன் என்பவருக்கும் தவறான தொடர்பு இருப்பதாக குறிப்பிட்டு ˙மேலூர் சார்பு நீதிமன்றத்தில் விவகரத்து வழக்கு தாக்க் செய்யப்பட்டதற்கு பிறகு இந்த புகார் உங்கள் மகளால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். விவாகரத்துவழக்கில் நீங்கள் அசா1ற்கு ஆதராவாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் ஆமாம். விவாகரத்து வழக்கில் உங்கள் மகளான அசா1ற்கும் ராமச்சந்திரன் என்பவருக்கும் இடையே தவறான தொடர்பு உள்ளதாக முடிவு செய்யப்பட்டு விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. விவாகரத்து தீர்ப்புக்கு எதிராக அ.சா1 எவ்வித மேல்முறையீடு போகவில்லை என்றால் மேல்முறையீடு போகவில்லை. அ.சா1ஐ எந்த காலத்திலும் எதிரிகள் அனைவரும் வரதட்சனை கொடுமை ஏதும் செய்யவில்லை என்றும், அசா1 ஆன உங்கள் மகளுக்கு எதிராக விவாகரத்து வழக்கில் தவறான தொடர்பு உள்ளதாக நிருபணம் செய்யப்பட்டு தீர்ப்பு ஏற்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எதிராக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல வரதட்சனையாக பணம் என்னிடம் கேட்டார்கள். எதிரிகள் உங்களிடமோ, அசா1னிடமோ, பணம் ஏதும் கேட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. அசா1 ஆன உங்கள் மகளுக்கு ஆதராவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.